**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 335/2022**
**Deposition of Witness for the Plaintiff – PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **தண்டபாணி** | **Caste:** | |
| **Father Name** | **வேலுச்சாமி** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **வெள்ளாளப்பட்டி, புலியூர்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 42 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 21.01.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 24.10.2020ம் தேதியன்று பிரதிவாதி வாதியிடம் ரூ.3,75,000–ஐ கடனாக பெற்றுக்கொண்டு ஒரு கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்தார். அந்த கடனுறுதிச்சீட்டை நான் தான் எழுதினேன். பிரதிவாதி அதில் கையொப்பம் செய்து வாதியிடம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் எழுதியது என்ற இடத்தில் செய்யப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன்.

நான் தான் தண்டபாணி என்பதனை காட்டுவதற்கு என்னுடைய ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆதார் அட்டையின் நகல் திறந்த நீதிமன்றத்தில் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு வா.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

## <u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பி.எஸ்.சி வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். பிரதிவாதி என்னுடைய உறவினர் இல்லை. நான் வாதியின் உறவினர் இல்லை. வாதியும், நானும் வரவு செலவு செய்து வந்தோம். தற்போது இல்லை. நானும், வாதியும் வரவு செலவு செய்து வந்தபோது, எங்களுக்குள் நல்ல உறவுமுறை இருந்தது. பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் ஓரளவுக்கு எனக்கு தெரியும். பிரதிவாதியின் குடும்பத்தில் அவரது மகன் காணமால் போய்விட்டார். பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். பிரதிவாதியின் மகள் திருமணமாகி, உப்பிடமங்கலத்தில் வாழ்ந்து வருகிறார். பிரதிவாதி மாடு வைத்து விவசாயம் செய்து வந்தார். வீட்டை வாடகைக்கு கொடுத்து வருமானம் ஈட்டிவந்தார். பிரதிவாதிக்கு ஓரளவுக்கு வசதி, வாய்ப்பு உள்ளது என்றால், சரிதான். பிரதிவாதியின் மகன் காணமால் போனவிவரம் எனக்கு தெரியும். பிரதிவாதியின் மகன் காணாமல் போவதற்கு முன்பாக ஓசூரில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கணவரின் தங்கை மகன் சுரேஷ் என்பவர் கவுன்சிலராக உள்ள விவரம் தெரியுமா என்றால், தெரியும். சுரேஷ் என்பவருக்கும், எனக்கும் இடையே நல்ல பழக்க வழக்கம் இருந்ததா என்றால், இல்லை. பிரதிவாதி கடன் பெறுவதற்கு முன்பாக கடன் சம்பந்தமாக என்னை தொலைபேசியில் அழைத்து பேசினார என்றால், பேசினார். அந்த தொலைபேசி எண் தற்போது நியாபகமில்லை. பிரதிவாதி என்னை தொலைபேசியில் அழைத்து பேசவில்லை என்றும், அவ்வாறு அழைத்து பேசியதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதியின் கணவரின் தங்கை மகன் சுரேஷ் என்பவர் பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக கடனுறுதிச்சீட்டு ஒன்றை தயார் செய்து கொடுத்ததை நான் மோசடியாக பூர்த்தி செய்தேன் என்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டின் பேரில் பிரதிவாதி எந்தவொரு கடன்தொகையும் பெறவில்லை என்றும், அவ்வாறு கடன் பெறுவதற்கான தேவையும் பிரதிவாதிக்கு ஏற்படவில்லை என்றால், சரியல்ல. எனக்கும், வாதிக்கும் இடையே

வரவு செலவு இருந்து வந்ததால், அந்த பழக்கத்தின் காரணமாக நான் வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அதனால் என் தரப்பு சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால், சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.